# திருமால் பத்துப் பதிகம்

பதிப்பாளர்

**சு.பிரபாவதி**

நெறியாளர்

**வீ.அரசு**

பேராசிரியர்-தலைவர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
மே - 2006

# திருமால் பத்துப் பதிகம்

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


ஆசிரியர்

**வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிதன்**

பதிப்பு

**சு. பிரபாவதி**

நெறியாளர்

**வீ.அரசு**

பேராசிரியர்–தலைவர்



**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**

**மே 2006**

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
பதிவு எண் — 43010516.

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு,**
பேராசிரியர் - தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'திருமால் பத்துப் பதிகம்'** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக **சு. பிரபாவதி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச்செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(முனைவர் வீ. அரசு)**

நாள் : 04-05-06
இடம்: சென்னை -5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**க. பிரபாவதி,**
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'சுவடியியலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'திருமால் பத்துப்பதிகம்'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

**(சு. பிரபாவதி)**

நாள் : 04-05-06
இடம்: சென்னை -5.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **பதிப்புரை** | **VI - XII** |
| **நன்றியுரை** | **XIII** |
| **திருமால் பத்துப்பதிகம்** | **1-35** |
| **பின்னிணைப்பு** | |
| 1. செய்யுள் முதற்குறிப்பரகாதி | 36 |
| 2. அருஞ்சொற்பொருள் | 41 |
| 3. நூற்றெட்டுத் திவ்வியதிருப்பதிகள் | 43 |
| **துணைநூற்பட்டியல்** | 47 |

# பதிப்புரை

தமிழ் இலக்கியப் பதிப்பு வரலாற்றில் சங்க இலக்கியத்தில் முதன் முதலில் திருமுருகாற்றுப்படை என்ற நூலையே ஓலைச்சுவடியிலிருந்து அச்சுப் பதிப்பாக ஆறுமுகநாவலர் பதிப்பித்தார். இதற்கு முக்கிய காரணம், இது சைவ சமயநூல் என்பதே ஆகும். எனவே, பதிப்புத்துறையில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கைத் தொடக்க காலத்திலிருந்தே காணமுடிகின்றது.

சங்க இலக்கியங்களிலிருந்தே திருமால் பற்றியான செய்திகள் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் 'மாயோன் மேயகாடுறை உலகமும்' எனத் திருமாலை இறைவனாகவும், அவர்கள் வாழ்ந்த பகுதியான காடும் காடு சார்ந்த இடத்தை முல்லை நிலமாகவும் இருந்தது என்கின்றார். இதற்கடுத்த பக்திஇலக்கியக்காலத்தில் இது வைணவம் எனும் சமயமாக வளர்ந்தது. திருமால், கண்ணன், விஷ்ணு எனப் பல அவதாரநிலைகளும் பல புராணங்களும் உருவாகின. இவ்விறைவனைப் பாடிய பாடல்கள் நாலாயிரதிவ்ய பிரபந்தம் என அழைக்கப்படுகிறது. இவற்றைப் பாடியவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர்.

பிரபந்த இலக்கியக் காலகாட்டத்தில் தலபுராணங்கள், மாலை, கலம்பகம், உலா, கோவை, எனப் பல இலக்கியங்கள் திருமால் பற்றிப் பாடின. அவ்வரிசையில் திருமால் பத்துப் பதிகம் என்னும் நூலும்ஒன்று.

## சுவடி அமைப்பு

திருமால் பத்துப் பதிகம் எனும் இந்த ஒரே ஒரு சுவடி மட்டுமே கிடைத்துள்ளது. இது ஆசிரியர் கைப்பட எழுதிய மூலச்சுவடி. இதன் தொடக்கம் **'தெய்வமேதுணை' 'ஆழ்வார் திருவடிகளே சரணம்'** எனத் தொடங்கி நூலின் இறுதியிலும் **'ஆழ்வார் திருவடிகளே சரணம்'** என முடிகிறது. இச்சுவடி சந்திபிரிக்காமல் (கூட்டெழுத்து முறையிலேயே) எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்களில் தற்கால தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வருவதற்கு முன் இருந்த எழுத்து வடிவங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. காப்புச் செய்யுள் ஒன்றும், நூற்பயன் ஒன்றும் பத்து பதிகங்களிலும் ஒவ்வொரு பதிகத்தின் பயன் என சேர்த்துப் பதினொரு பதினொரு பாடல்களாக மொத்தம் நூற்றுப் பத்து பாடல்களையும் சேர்த்துத் திருமால் பத்துப் பதிகம் நூற்றுப் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டதாகும். இதில் நான்காவது பதிகத்தில் 8,9 பாடல்கள் மட்டும் இடம் மாறியுள்ளன என்ற குறிப்பை ஆசிரியரே குறிப்பிட்டுள்ளார். எல்லா பதிகத்திலும் ஒவ்வொரு தலத்தில் வாழும் இறைவனே என விளித்து, அதனையே மகுடமாக அமைத்துப் பாடியுள்ளார். ஐந்தாவது பதிகத்தில் 'இந்தப்பதிகம் கொச்சக் கலிப்பாவும், கலிப்பா விரவி மகுடத்துக்குச் சோர்வின்றி நின் நின்றமை காண்க'. என்று இப்பதிகம் எந்த யாப்பில் அமைந்தது எனும் குறிப்பையும் தந்துள்ளார்.

## ஆசிரியர் குறிப்பு

திருமால் பத்துப் பதிகத்தின் ஆசிரியரான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 22.11.1839ல் (விகாரி கார்த்திகை 16)

திருநெல்வேலியில் பிறந்தார். இவருடைய தந்தையார் செந்தினாயகம் பிள்ளை , தாயார் பேச்சி முத்தம்மை. இவருடைய இயற்பெயர் சங்கரலிங்கம் என்பதாகும். இவர் ஒன்பதாம் வயதிலேயே தென்காசியை அடுத்த சுரண்டை என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள பூமிகாத்தாள் என்னும் அம்மையைப் பற்றி

**அமுதம் கடையும் நாள் ஆலம் வெடித்துத்**
**திமுதம் எனத்தீ எரித்துச் சென்ற- தமுதம் எனத்**
**தீக்கடவுள் உண்டார்; திருக்கண்டத்தைப் பிடித்துக்**
**காத்ததனால் பூமிகாத்தாள்.**

என்னும் வெண்பாவை இயற்றினார்.

இவர் முருகப் பெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்ட கௌமாரர். தத்துவநெறியில் மெய்கண்டாரின் சைவசித்தாந்தத்தையும் சங்கரரின் அத்துவிதத்தை சில இடங்களிலும் ஏற்றுக் கொள்பவர்.சூரியன்,சிவபிரான், பராசக்தி, திருமால், விநாயகர்,முருகப்பெருமான் என்னும் அறுசமய வடிவங்களும்ஒரே பரம்பொருளின் பல்வேறு பண்புகளை உருவகப்படுத்துவன என்பதும், அவற்றுள் அதனை வழிபட்டாலும், அவ்வழிபாட்டை ஏற்றுப் பயன்தரும் பரம்பொருள் ஒன்றே என்பதும் இவருடைய அடிப்படைக் கொள்கையாகும். இக்கொள்கையின் அடிப்படையிலேயே இவர் எல்லா இறைவன் மீதும் பாடல்கள் பாடியுள்ளார். இறைவன் மீது கொண்ட ஊடலால் தாம் எழுதிய சுவடிகளில் பாதியை தாமே அனலிலும், புனலிலும் போட்டு அழித்தார். எஞ்சிய சுவடிகள் உபதேச பரம்பரையைச் சேர்ந்த சிரவையாதீனத்தில் பேணிக்

காக்கப்பட்டு வருகின்றன. இவர் திருவாமாத்தூரில் 5.7.1898 அன்று (விளம்பி ஆனி 23 திருவோணம்) குருவருளில் கலந்தார்.

வண்ணம் பாடுவதில் வல்லவர் என்பதால் வண்ணச்சரபம் என்றும் உடல்முழுவதும் திருநீருபூசி காவிச்சிற்றாடை அணிந்து விரிந்த தலைமுடி, உருத்திராக்கமாலை, கைத்தண்டம் ஆகியவற்றோடு தோற்றம் அளித்ததால் தண்டபாணி சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார். திருப்புகழ் சுவாமிகள், முருகதாசர் போன்ற பெயர்களும் இவருக்கு உண்டு.

## யாப்பு அமைப்பு

திருமால் பத்துப் பதிகம் என்னும் இந்நூலின் ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு யாப்பால் அமைந்துள்ளன. காப்பும் நூற்பயனும் நேரிசை வெண்பா யாப்பில் அமைந்துள்ளன. மற்றபத்துப் பதிகங்களும் சீர்வகையாலும் சந்த வகையாலும், வண்ண வகையாலும் பெயர்பெறுகின்றன. கொச்சகக் கலிப்பா-5, கலிவிருத்தம்-3, அறுசீர் ஆசிரியவிருத்தம்-1,6,7, எழுசீர் ஆசிரியவிருத்தம் -4, எண்சீர் ஆசிரியவிருத்தம் -9, அறுசீர் சந்தவிருத்தம் -2, எழுசீர் சந்த விருத்தம்-7, அறுசீர் வண்ணவிருத்தம்-10, ஆகிய யாப்பிலமைந்த பாடல்கள் இதில் உள்ளன. பல்வேறு யாப்பிலான கதம்ப பாமாலை போல் இந்நூல் பாடப்பட்டுள்ளது.

## பதிகம்

இது தமிழ் மொழியின் பழமையான பிரபந்த இலக்கியங்களில் ஒன்று. குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி

ஒரே யாப்பில் பத்துப்பாடல் பாடுவது பதிகம் எனப்படும் இதனை,

**'பப்பத்தாய் எத்துறையும் பாடல்பதி கமதே'** (168) என சுவாமிநாதம் வரையறுக்கின்றது.

சங்க காலத்திலேயே பதிற்றுப்பத்திலும் ஐங்குறு நூற்றிலும் இந்தப் பதிக அமைப்பைக் காணலாம். இதன் வளர்ச்சிநிலையாக முதன் முதலில் காரைக்கால் அம்மையாரே திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகம் என்னும் நூலினைப் பாடினார்.

பன்னிரு பாட்டியல் கூறும் 68 வகையான சிற்றிலக்கியங்களில் அரிபிறப்பு என்பது திருமாலின் பத்து அவதாரங்களையும் (188) தசாங்கப் பத்து என்பது ஓர் அரசனுக்குரிய பத்து ராச சின்னங்களையும் (140) ஒரே யாப்பில் பாடுவதாகும் இவையாவும் பதிக விகற்பமே.

பதிக இலக்கியம் சங்ககாலத்திலேயே தோன்றிய போதிலும் ஆழ்வார் நாயன்மார்களின் தோற்றத்திற்குப் பிறகுதான் இது தமிழில் தனிச்செல்வாக்குப் பெற்று மிக அதிகமாகப் பயிலப்படலாயிற்று என்பதே உண்மை எனப் புலவர் ப. வெ. நாகராசன் திருவாமாத்தூர் பதிகச் சதகப் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

## திருமால் பத்துப் பதிகம்

இந்நூலின் காப்புச் செய்யுளின் இறுதி அடி தும்பிக்கையான் துணை என விநாயகப் பெருமானை மட்டும் முன்னிருத்தாமல் அவனை வைணவ சமயத்தவனாகக் காட்டத் தும்பிக்கை ஆழ்வான் துணை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்நூலின் ஒவ்வொருபத்தும் திருமாலின் ஒவ்வொரு திருத்தலங்கள் பற்றியதாகும். இதில் ஒன்பதாம் பத்து திருமாலின் திவ்யதேசங்கள் நூற்றெட்டினையும், பத்தாம் பத்து அடியவர் உள்ளத்தையும் முதன்மையாகக் கொண்டு பாடப்பட்டவையாகும். இப்பத்துப் பத்துப் பாடல்களின் இறுதியிலும் அப்பத்தைப் பாடுவதன் பயன் என்ன என்று கூறும் திருப்பாவை மரபில் இது அமைந்துள்ளது.

மேலும், இப்பத்து பாடல்களில் எட்டாம் பாடல் கசேந்திர மோட்ச வரலாற்றையும், 9ம் பாடல் இரணியன் வதை பற்றியும்,10ம் பாடல் தமிழ் தமிழ்பாடிய ஆழ்வார் குறிப்பாக, நம்மாழ்வாரைப் பாடுபொருளாக அமைத்துள்ளார். பரகதி அடைதலே இந்நூற்பயன் என்பதை ஒவ்வொரு பத்திலும் குறிப்பிடுகின்றார்.

## மொழிநடை

இப்பதிகப்பாடல்களில் வாய்மொழி வழக்காறுகள், பேச்சுவழக்குச் சொற்கள், பிறமதச் சொற்கள் போன்றவை இச்சுவடியியல் உள்ளன. ற,ர வேறுபாடு, ந,ன,ண, ல,ழ,ள வேறுபாடு ஏதும் இல்லை. புள்ளி இடாமல் மட்டுமே எழுதியுள்ளர். சுவடி முழுக்க கூட்டெழுத்து அமைப்பிலே எழுதப்பட்டுள்ளது.

## நூல் சிறப்புகள்

1. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு யாப்பில் எழுதப்பட்டுள்ளது.

2. பேச்சு வழக்குச் சொற்களும், கிறித்துவ மரபுச் சொற்களும் இவருடைய நூலில் காணப்படுகின்றன. இன்று

பேச்சு வழக்கில் **'தில்'** இருந்தா மோதிப்பார் என சவால் விடும் தில் என்ற சொல்லை இதே பொருளில் பயன்படுத்தியுள்ளார். இதே போல் **கிருபை** என்னும் கிறித்துவ மரபுச் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார்.

3. இந்நூலில் வாய்மொழி வடிகாறுகளைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

**வேலியே பயிரைத் தின்ற விதம் என...** 6

4. திருவரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம், திருவைகுந்தம், திருவயிந்திரம், திருவில்லிபுத்தூர், திருவாணுமாமலை, திருஅனந்தை,என்ற எட்டுத் திருத்தலங்கள் மட்டுமல்லாது ஒன்பதாவது பத்தில் நூற்றெட்டுத்திருத்தலங்களையும்(காண்க பின்னிணைப்பில்) , பத்தாவது பத்தில் அடியவர் உள்ளத்தையும் கோயிலாக்கிப் பாடியிருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

# நன்றியுரை

சென்னைப் பல்கலைகழகத் தமிழ் இலக்கியத்துறையில் முதுகலை வகுப்பில் சேர்ந்து பயில வாய்ப்பளித்தும், சுவடியியல் பட்டய வகுப்பில் சேர்ந்து திருமால் பத்துப் பதிகம் என்னும் ஓலைச் சுவடியினைப் பதிப்பிக்க அனுமதியினை வழங்கியும் இந்நூலினைப் பதிப்பிக்க பலவழிகாட்டுதலையும் நல்கிய எனது பேராசிரியரும் நெறியாளருமான **முனைவர் வீ. அரசு** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடிப்பட்டயப் பயிற்சி வகுப்பில் சுவடி பயிற்சி வழங்கிய ஆசிரியர் **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும் , திருமால் பத்துப் பதிகம் என்னும் இச்சுவடியை வழங்கி, அவ்வவ்போது தேவையான வழிகாட்டுதலையும் நல்கிய **புலவர் பா.வெ. நாகராஜன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குப் பல்வேறு சூழ்நிலைகளில் துணை நின்று உதவியினை, நல்கிய அனைத்து **நண்பர்களுக்கும், சகோதரர்களுக்கும்** கணிப்பொறிமூலம் அழகான முறையில் அச்சிட்டு நூல் வழங்கிய **டுடேகிராபிக்ஸ்** அச்சகத்தார் **ஆர்.பாபு** அவர்களுக்கும் அச்சகத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சு.பிரபாவதி**

# திருமால் பத்துப் பதிகம்

## காப்பு

### நேரிசைவெண்பா

நத்துப் பதுமமென்கை நாரா யணன்மகிழப்
பத்துப் பதிகம் பகர்வதற்கு - முத்துப்போல்
நம்பிக்கை உள்ளவர்க்கு நால்வகைச்சீர் ஈந்தருளும்
தும்பிக்கை ஆழ்வான் துணை. 1

# முதல் பதிகம்

## திருவரங்கம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

திருமகள் குலவும் மார்பின்
சிந்தையில் திரைநீர் சூழும்
ஒருமடக் கொடிதன் ஆசை
உயர்கைபல் உயிரால் அன்றோ?
கருமணி வண்ணா பொன்ஊர்க்
காவலன் கவலை தீர்ப்பாய்!
அருமறைக் கிழவன் போற்றும்
அரங்கமா ளிகையம் மானே! 1

கரவிலா மனத்தால் உன்னைக்
கருதிடாக் கயவர் தம்மைப்
பரவிநின் றிரவா வண்ணம்
பரிந்தருள் புரிவாய் கொல்லோ?
இரவினும் கரிய மேனி
இறைவனே இணைஇல் லானே!
அரவினில் துயிலும் தேவே!
அரங்கமா ளிகையம் மானே! 2

வீழியங் கனிவாய் நல்லார்
வியன்முலைக் குருகி வாடிப்
பாழினில் தொலையா துன்பொற்
பதமளித் தருள வேண்டும்
சூழியம் முடிக்கும் நாளில்
தொடர்ந்தவாள் அவுணர்ச் செற்றாய்
ஆழியங் கரத்து நாதா!
அரங்கமா ளிகையம் மானே! 3

வைவவர் தமக்கும் வீடு
வழங்கும்நீ அலது மற்றோர்
தெய்வம்உண் டெனப்போ ராடும்
சிதடரைச் சேரேன் கண்டாய்!
பெய்வளைக் கிரங்காப் பொல்லார்
பெருகிய சபையில் அந்நாள்
ஐவர்தம் மானம் காத்தாய்
அரங்கமா ளிகையம் மானே! 4

வஞ்சக வெள்ளி ஓர்கண்
மறைந்தநாள் வளர்ந்து காட்டும்
செஞ்சரோ ருகத்தாள் போற்றும்
தெளிவெனக் களித்தாய் அன்றோ?
கஞ்சனாம் மாமன் ஏவக்
கனல்விழி பிறழத் தோன்றும்
அஞ்சனக் களிறு கொன்றாய்
அரங்கமா ளிகையம் மானே! 5

வேலியே பயிரைத் தின்ற
விதம்என உலகை வாட்டும்
கோலினர்க் கெமன்ஆம் உன்னைக்
குறித்தும்நான் கொதிக்க லாமோ?
வாலியும் மரம்போல் சாய
வாங்கிய வரிவில் லோனே!
ஆலிலைத் துயில்கொண் டோனே
அரங்கமா ளிகையம் மானே! 6

வாடிய மனத்தி னேற்கு
மதிமுடித் தவனே போல
நீடிய புகழ்பெற் றோங்கும்
நெறியளித் தருவாய் கொல்லோ?
கூடிய சிறுவர் எல்லாம்
குழலிசை முழக்கப் பாம்பில்
ஆடிய மலர்த்தா ளானே!
அரங்கமா ளிகையம் மானே! 7

வாவியிற் கதறும் ஆனை
மகிழ்வுற வளைசங் கேந்தி
நீவிரைந் தந்நாள் வந்த
நிசம்உணர்ந் தடைந்தேன் கண்டாய்
தாவில்பன் னிரண்டு நாமம்
சாத்திட்டெழுத்தும் சொல்வார்க்கு
ஆவியும் உடலும் ஆவாய்
அரங்கமா ளிகையம் மானே! 8

தூணுளே நின்று தோன்றித்
தொண்டனைப் புரந்து பொல்லான்
வீணுடல் கிழித்த ஞாயம்
விளங்கியும் வெகுண்டேன் அந்தோ!
சேணுளார்க் கமுதம் ஊட்டித்
திரைகடல் துயின்ற கோவே!
ஆணுடன் பெண்ணும் ஆவாய்
அரங்கமா ளிகையம் மானே! 9

புளிநிழல் அமர்ந்தோன் ஆதி
புங்கவர் பலர்க்கும் ஈந்த
களிஎனும் கடலைச் சற்றே
கடையனேன் காணொண் ணாதோ?
வெளிமுதல் திகழ்ஐம் பூத
விளக்கமும் சுடரும் செய்தாய்
அளிமிகு துளவத் தானே!
அரங்கமா ளிகையம் மானே! 10

வானிடை வளர்ந்த வேணு
வனத்தினில் வந்த பாலன்
ஆனிஇல் வளமை தோயும்
அரங்கமா ளிகையம் மானை
பானிறத் தமிழால் சொன்ன
பதிகமே பாவும் மேலோர்
தேனிகர் விரசைக் கப்பால்
திகழ்பதி அடைவார் அன்றே. 11

## இரண்டாம் பதிகம்
## திருப்பதி
## அறுசீர் சந்த விருத்தம்

இளையமட ந்தையர் கொங்கைக
ளான்மயல் எய்திஇ டைந்திடும்நான்
விளைவுறும் அன்பொடு நின்அடி
யார்நடு மேவுவ தென்றுரையாய்
களைஎன வாழும்அ ரக்கர்த
மக்கொரு காலனில் வந்தோனே!
வளையுடன் ஆழிபு னைந்தவ
னேவட மலைவளர் நெடுமாலே! 1

கந்தர மேநிக ரும்குழ
லார்விழி கட்கிரை ஆகாதே
செந்தமிழ் கொண்டுதி னந்தொறும்
நின்துதி செய்யவி ரும்பேனோ

அந்தர மன்னவ ராகமுன்
நாள்உறும் ஐவர்த மக்காக
மைந்தரை யும்கொலை செய்தவ
னேவட மலைவளர் நெருமாலே! 2

பண்ணொடு நின்தமிழ் வேதம்மொ
ழிந்துயர் பத்தர்க ளைக்காணாக்
கண்ணொடு வாழ்வுறும் என்னது
வன்துயர் களையவும் நினைவாயோ?
பெண்ணொடு முன்வன மூடந
டந்தபெ ரும்புகழ் உள்ளானே
மண்ணொடு விண்ணும் அளந்தவ
னேவட மலைவளர் நெடுமாலே! 3

உலகம்அ ளிக்கும்உ னைத்துதி
யாதுறு மூடரு டன்கூடாது
அலகில்பு கழ்ச்சியை யுந்தமிழ்
கொண்டுயர் அன்பொடு சொல்லேனோ?
இலகும ழுப்படை யீசன்இ
றைஞ்சிட இன்னருள் செய்தோனே!
மலரவ ளுக்குயிர் ஆனவ
னேவட மலைவளர் நெடுமாலே! 4

அஞ்சனும் ஈசனும் இந்திர
னுந்தினம் அணிமலர் என்றோதும்
செஞ்சர ணத்தில்என் நெஞ்சம்இ
ருந்திடர் தீரும்ந லம்புரிவாய்

பஞ்சவ ருக்குள்ஒ ருத்தன்ம
னப்படி பற்பல செய்தோனே?
வஞ்சர்அ ளப்பரி தானவ
னேவட மலைவளர் நெடுமாலே! 5

காளநெ டுங்கட லைக்கலை
யாஅணி கற்புடை மின்னாளைத்
தேளதி னும்கொடி யோர்பலர்
செய்துயர் தீரஇ யற்றாயோ?
கோளன்ள னும்துரி யோதனன்
வாழ்வுகு லைந்திட முன்செய்தாய்!
வாளர வில்துயி லும்பர
னேவட மலைவளர் நெடுமாலே! 6

புலிமிகு பாரவ னத்துறும்
ஓர்மறி போலவ ருந்தாமல்
கலிமிகு நாளினும் நின்னடி
யார்மகிழ் காரணம் ஓர்வேனோ?
ஒலிமிகு நாணுறும் வில்லுடை
யாய்புவி யுண்டுமிழ் வாயானே!
வலிமிகு புள்ளர சூர்பவ
னேவட மலைவளர் நெடுமாலே! 7

ஆனைவ னத்திடை மூலம்ள
னாமுனம் அலறிட வந்தாளும்
சோனைமு கில்திரு மேனியென்
முன்புது லங்குவ தெந்நாளோ?

மானைவ தைத்தவ னே!அநு
மானும்வ ணங்கிய தாளானே!
வானைஅ ளிப்பவ னேஎழில்
சேர்வட மலைவளர் நெடுமாலே! 8

ஒருமகன் என்றும்இ ரங்கிடல்
அற்றவன் உறுகண்உ றச்செய்தோன்
குருதிகு டித்துநெ டுங்குடர்
மாலிகை கொண்டது வம்பன்றே!
திருமகள் பச்சைந றுந்துள
வோர்மணி சேர்தரு மார்போனே!
வருணன்வ ணங்கமுன் எய்தவ
னேவட மலைவளர் நெடுமாலே! 9

தன்நிக ரும்குரு கூரன்மு
தற்பகர் சற்சனர் சொற்சேரும்
நின்இரு தாளிடை என்னது
புன்மொழி நீடிடும்நாள்உளதோ?
மின்னிய செங்கதிர் வேல்கொடு
மாமனை வெல்லும்நெ டும்தோளா!
மன்னிய தண்டமிழ் எல்லைய
தாம்வட மலைவளர் நெடுமாலே! 10

வெற்றியொ டன்றொரு மோஇனி
ஆடிய வேணுவ னத்துள்ளான்
மற்றிணை இன்றிய சீர்அக
லாவட மலைவளர் நெடுமாலைப்

பற்றிய நேயமு டன்பக
ரும்கவி பத்தும்உ ரைப்போரைப்
பொற்றிகி ரிச்சிவன் ஆனாதிய
வானவர் புகழ்வது நிசம்ஆமே. 11

## மூன்றாம் பதிகம்
## காஞ்சிபுரம்
## கலிவிருத்தம்

துளவுடன் பலமலர் தொடுத்துன் தாளில்என்
உளமொடு புனையும்வாழ் வுதவி ஆள்வையோ!
களவுநெய் யொடுபுவி கமழும் வாயனே!
வளமிகு காஞ்சியில் வரத ராசனே! 1

உன்உருத் தோன்றிய ஒருக ணாவில்என்
தன்னுரை பிறந்தது சரதம் அல்லவோ?
பொன்னுறு மார்பனே! பொருவில் ஆழியாய்!
மன்னுசீர்க் காஞ்சியில் வரத ராசனே! 2

இயலுடைப் புலவனுக் கிரங்கி அன்றுநீ
அயல்எழுந் தவன்சொலால் அடைந்த தில்லையோ?
மயல்கொளும் முனிவரை மகளிர் ஆக்கினாய்!
வயல்மலி காஞ்சியில் வரத ராசனே! 3

சதிமிகு சமணரில் கொடிய தன்மையோர்
எதியர சனையனால் இறக்கச் செய்வையோ?
விதிவரும் உந்தியாய்! விண்ணின் மேயபொன்
மதிள்உறும் காஞ்சியில் வரத ராசனே! 4

ஏழைடியர் கருதொணா எழுத்தெட் டோதினோர்
ஊழைவென் றிடுநலம் உணர்ந்தும் வாடினேன்
தாழையில் பெரிதுயர் தகைமை தோய்தரு
வாழைசேர் காஞ்சியில் வரத ராசனே! 5

சேவிடத் திவர்திரு சிவனும் கைதொழும்
தேவிவன் எனஉனைத் தெளிதல் பொய்கொலோ
காவியும் நெய்தலுங் கமலத் தோடுறும்
வாவிசூழ் காஞ்சியில் வரத ராசனே! 6

வேடரும் இகழ்தசை விரும்பும் ஈனரால்
நாடவர் யாவரும் நலிதல் நீதமோ?
ஆடக வரைஎன அவிரும் பற்பல
மாடம்ஆர் காஞ்சியில் வரத ராசனே! 7

ஆய்கைநேர் திருவுரு அவிர அங்குநீ
போய்மைபோற் கதறிபம் புரக்க வில்லையோ?
தூய்மைஆர் சங்கொடு துலங்கும் ஆழியாய்
வாய்மையோர் காஞ்சியில் வரத ராசனே! 8

கள்ளமா மொழிபகர் கனகன் றன்னுயிர்
கொள்ளவோர் மங்கலில் குதிக்க வில்லையோ?
எள்ளல்கூர் அவுணனுக் கிணையில் வீடருள்
வள்ளலே காஞ்சியில் வரத ராசனே! 9

கொண்டல்மேல் வளர்புளிக் குருகை யூர்அமர்
தொண்டன்ஆ தியர்க்கருள் சுகம்என் றீவையோ?
பண்டசோ தையின்முலை பருகும் பாலனே!
வண்டமிழ்க் காஞ்சியில் வரத ராசனே! 10

வேணுமால் வனத்திடை விளங்கும் நாவலன்
மாண்உறும் காஞ்சியில் வரத ராசனைப்
பேணும்இப் பதிகமே பேசும் பெற்றியோர்
தாணுவா தியர்புகழ் தகைமை யாளரே. 11

## நான்காம் பதிகம்
## திருவயிந்திரபுரம்
## எழுசீர் ஆசிரிய விருத்தம்

கார்உலாம் பொழில்நேர் குழல்மினார்க் குருகும்
கடையனேன் தன்னைநின் கமலச்
சீர்உலாம் பதங்கள் சூட்டியாண் டருளும்
திறன்உனக் கில்லையோ? செப்பாய்-
வார்உலாம் தனத்தார் இருவர்தோள் புணரும்
மாயனே வான்உறும் குடுமித்
தேர்உலாம் தெருக்கள் தோறும்வால் வளைஊர்
திருவயிந் திரபுரத் திறையே! 1

தவம்முயன் றுழல்வார் தம்மையும் பழிப்பேன்;
தமிழ்த் திருவாய் மொழிபடிக்கும்
அவரொடும் பழகேன் எவ்வண்உய்ந் துன்அருள்
அடைகுவேன் அருள்கணால் பாராய்
பவளவாய்க் கரிய மேகமே கொடியோர்
பரிசறக் களையும் வாட்படையாய்!
சிவனுடன் அயனும் தான்எனத் தெரிப்பாய்
திருவயிந் திரபுரத் திறையே! 2

அஞ்சி பூதமும்தந் தறுவகைச் சமையம்
அமைத்துநின் றாடுநின் அருமை
கொஞ்சுபைங் கிளிநேர் மொழிமினார்க் குருகும்
கொடியர்தாம் உணர்வதோ கூறாய்-
மஞ்சுநேர் கரிய மேனியாய் அளப்பில்
வடிவெடுத் தன்பர்பால் வருவாய்!
செஞ்சுடர் ஆழிக் கரத்துமா தவனே!
திருவயிந் திரபுரத் திறையே! 3

பாவலர்க் கெளியாய் எனஉல கெல்லாம்
பகர்தலால் நின்புகழ் பாடும்
ஆவலால் அடைந்தேன் இகழ்ந்திடா தாட்கொண்டு
அடியரோ டமைத்தளித் தருள்வாய்-
மாவலி முடியும் ககனமும் பாரும்
மறைகளும் கமழ்ந்ததாள்மலராய்!
தேவரூர் இடுக்கண் முழுமையும் தவிர்ப்பாய்!
திருவயிந் திரபுரத் திறையே! 4

நீஎனக் கந்நாள் இயற்றிய நலமும்
நெறிபிழைத் தொழுகும்நான் உன்னைத்
தாய்எனக் கருதும் உண்மையும் உலகில்
சகலரும் உணரும்நாள் உளதோ?
தீஎனக் கொதிக்கும் சிறியவர் தம்மால்
தெரிவரும் தெய்வநா யகனே!
சேய்என ஆயர் பாடியில் வளர்ந்தாய்!
திருவயிந் திரபுரத் திறையே! 5

கோமளக் குறத்தி கணவனும் மதநீர்க்
குஞ்சர முகவனும் சிவனும்
வேம்அழல் பாலைக் கிழத்தியும் இரிய
வென்றநீ இருந்தும்நான் வெருண்டேன்-
மாமனை வேலால் தொலைத்தனை; வாணன்
மலைநிகர் புயம்எலாம் அறுத்தாய்;
தேமலர்ச் சோலை சூழ்தர விளங்கும்
திருவயிந் திரபுரத் திறையே! 6

உன்னைவிட் டொருதே வுண்டெனக் குளறும்
உலுத்தரோ டிணங்கிடா வண்ணம்
என்னைஆண் டருளி எட்டெழுத் துரைக்கும்
இயல்பினோ ருடன்உறப் புரிவாய்-
அன்னையர் இருவர் அலமரத் தெரிந்தன்
றவரவர்க் கிசைந்தவா றறைந்தாய்!
தென்னையும் கமுகும் வாழையும் நெருங்கும்
திருவயிந் திரபுரத் திறையே! 7

பொய்வழக் குரைக்கும் இரணியன் கதறப்
புறமுடன் அகம்அலாத் தலத்தில்
கைவளர் நகத்தால் குடர்பறித் தணிந்த
கடவுளே துணைஎனல் கடவேன்;
பைவளர் கரும்பாம் பலமர நடித்த
பங்கயப் பதமுடை யானாம்
தெய்வநா யகனே செழுந்தமிழ் முழங்கும்
திருவயிந் திரபுரத் திறையே! 8

ஆனைஊன் அருந்த விரும்பிய முதலை
அதனைவென் றளிக்கும்நின் னருளை
ஏனையோர் உணரப் புரிந்துநின் றுவப்பான்
எனக்கருள் வழங்குவ தென்றோ?
பானையோ டொருவன் பதம்பெறக் கொடுத்தாய்;
பழுதிலாப் பொதுவர்தம் பதியில்
தேனைநேர் மொழியார் மனைதொறும் இருந்தாய்
திருவயிந் திரபுரத் திறையே! 9

உறங்கிடாப் புளியில் இருந்தவன் முதலாம்
உத்தமர்க் குதவிய பேற்றை
நிறங்கிளர் கருடப் பரியின்மேல் துலங்கி
நீஎனக் கருளும்நாள் ஊதோ?
மறங்கெடா இலங்கை மன்னவன் மடிய
வளைத்தவில் உடையமா யவனே!
திறங்கொள்வாள் அவுணர் குலமறக் களைவாய்!
திருவயிந் திருபுரத் திறையே! 10

செப்பரும் பெருஞ்சீர் முழுமையும் குலவும்
திருவயிந் திரிபுரத் திறையை
மைப்படத் தழையும் வேய்வனத் துள்ளார்
மகிழ்வுற வரும்ஒரு புலவன்
வெப்பம்அற் றழியாக் களிப்புறத் துதித்த
வியன்றமிழ்ப் பதிகமே விழைவோர்
முப்பகுப் புறும்வேல் சமன்முதற் கொடியோர்
முனிவினுக் கஞ்சிடா தவரே. 11

# ஐந்தாம் பதிகம்
## திருவில்லிபுத்தூர்
### கலிப்பா

இளம்குதலைச் சிறுபாலர் இகழ்ந்தாலும் மகிழ்வார்போற்
களங்கம்அறாச் சிற்றறிவேன் கழறியசொல் புனைந்தருள்வாய்
வளம்கவினும் பொதுவர்பதி மருங்கிருக்கும் வனத்தேஓர்
விளம்கனறால் எறிந்தோனே! வில்லிபுத்தூர் வேதியனே! 1

எத்தனையோ கோடிஉரு எடுத்தாடும் இயல்பெல்லாம்
பத்தனது தேர்ஊர்ந்த பான்மையொப்ப தெனச்சொல்லேன்
மைத்தடங்கண் உருக்குமணி மணவாளா! வளைஊதும்
வித்தகனே எழில் ஆரும் வில்லிபுத்தூர் வேதியனே! 2

கொள்ளரிதாம் எட்டெழுத்தில் குடியாகக் குலவும்உனை
வள்ளலாம் ஒருவன்அன்றோ மகிதலத்தில் அறிவித்தான்?
கள்ளம்மிகு புள்அலகைக் கையாற் கிழித்தெறிந்தாய்
விள்ளரிய சீர்ஆரும் வில்லிபுத்தூர் வேதியனே! 3

வில்திகழும் வாள்நுதலாள் மென்குழலில் சூடியபூ
உற்றிருக்கும் தோளோ டுனையொருக்கால் காணேனோ?
பொற்றிகிரிக் கையான் புனைபூ அணிதாளா!
வெற்றிமிகு தென்பாண்டி வில்லிபுத்தூர் வேதியனே! 4

உன்பேர் உரைப்போ ருடன்திரியும் மாருதியும்
என்பேரில் சற்றும் இரங்குகிலான் என்செய்வேன்?
வன்பே மிளிர்இலங்கை வாள்அரக்கன் மார்பிடந்தோர்
மின்பேர் அவாஒழித்தாய் வில்லிபுத்தூர் வேதியனே! 5

நீதம் கருதார் நிலைகுலையப் போர்புரிந்துன்
பாதங்கள் சூடும்ஒரு பண்பினனைப் பாரேனோ?
போதன் கதறப் புணரிஉற்றோர் பொன்றவென்று
வேதங்க களைக்கொணர்ந்தாய் வில்லிபுத்தூர் வேதியனே! 6

நாடவர்கள் பற்பலரும் நகைகூரத் திரியும்எனக்கு
ஆடகம்நேர் பொற்றாள் அளித்தருளும் நாள்உளதோ
சூடகக்கை நாரதனாந் தோகைமனம் களிகூர
வேடன்உருக் கொண்டணைந்தாய் வில்லிபுத்தூர் வேதியனே! 7

மூலம்எனக் கூவியதால் முதலையைக்கொன் றானையின்ஓர்
காலதனில் புண்ஒழித்துக் கருணைபுரிந் திலைகொல்லோ?
கோலஉருக் கொண்டந்நாள் குவலயத்தைக் கொடுவந்தாய்;
மேலவர்கள் வந்துதொழும் வில்லிபுத்தூர் வேதியனே! 8

நாணிஒரு தொண்டன் ஒலியா தவன்இசைந்த
தூணில் இருந்து துலங்கிஅருள் செய்திலையோ?
பாணி மதிதும்பை பச்சறுகு கொன்றைஅணி
வேணியன்நேர் அன்பர்புகழ் வில்லிபுத்தூர் வேதியனே! 9

எயில்உடுக்கும் தென்குருகை இறைவன்முதல் பலர்தாமும்
பயில்இயல் தமிழ்சூடும் பாதமலர் பெறுவேனோ?
மயிலிற்கு முடித்துநந்தன் மனைமுன்றில் தவழ்ந்தோனே
வெயில்எறிக்கும் மதில்சூழும் வில்லிபுத்தூர் வேதியனே! 10

வியனார்தண் தமிழ்மணக்கும் வில்லிப்புத்தூர் வேதியனைப்
புயல்ஆரும் வேணுவனப் புலவன்நுவல் கவிபத்தும்
பயன்வேண்டிக் கருதும்அவர் பார்ஆள்வார்; பன்னுபொருள்
நயம்நாடித் துதிக்கும்அவர் நான்முகன்போல் மகிழ்வாரே. 11

## ஆறாவது பதிகம்
## திருவைகுந்தம்
## அறுசீர் ஆசிரிய விருத்தம்

மைத்தடங்கண் செந்திருவும் மணியும்நறும்
துளவும்உறு மார்பில் என்னைச்
சித்தம்மகிழ் வால்அணைத்தோர் மொழிகூறி
ஆண்டருளும் தினம்ஒன் றுண்டோ?
முத்தலைவேல் சமன்அணுகா நலம்கொடுக்கும்
நாரணனே! முரனைக் கொன்றாய்!
பத்தர்மனங் களிகூர விளங்குதிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 1

ஊர்அளந்த கொடுமைஉளார் குலம்அழியப்
பொருது வெல்லும் ஒருவன்
நார்அளந்த நெஞ்சுடையார் துதிகூற
விளையாடும் நாள்ஒன் றுண்டோ?
கார்அளந்த விண்அளந்து மாவலிதன்
முடிஅளந்து கடல்ஏழ் சூடும்
பார்அளந்த பங்கயப்பூ மணத்ததிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 2

கிண்ணமுலைப் பேதைநல்லார்க் குருகிமனம்
தளர்வேண்மேல் கிருபை கூர்ந்து
வண்ணநறும் தமிழ்ப்பாடு மவர்க்கும்உனக்
கானதொண்டும் வழங்கு வாயோ?
மண்ணதனை உண்டுமிழ்ந்த வாயனே
அமுதளித்த வாஞ்சை யாலே
விண்ணவர்கள் வந்துதொழத் திகழ்ந்ததிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 3

அங்கம்ஒரு நான்குடைய மன்னர்முன்னர்
வைதோற்கும் அருள்வீ டீந்தாய்
எங்களுக்கோர் அணுவளவும் இரங்காமல்
இருக்கில்உனக் கிழிவாம் கண்டாய்!
திருங்கள்நிகர் வெண்குடையும் மணிமுடியும்
தருமன்உறச் செய்த மாலே!
பங்கயப்பூந் தடங்கோடி மருவுதிரு
வைருந்தைப் பதியுள் ளானே! 4

அடர்கரிய வரைகள்நிகர் அரக்கர்குலம்
அறக்களைந்தாய் அவனி யோருக்கு
இடர்புரியும் இவர்அழியப் பொருதுவெல்லும்
தில்ஒருவற்கீயொண் ணாதோ?
விடர்தமக்கும் இனியோனே! தருமர்ஒரு
நாயொடுபோம் விரசை போலும்
படர்பொருநை வடபாலில் குலவுதிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 5

தருமமுதல் ஆகியநால் வகைச்சீரும்
பெறுமாறு சாற்றும் நூலாம்
அருமறையில் சொலும்விரசை பொருளையோ
வேறுளதோ அறைய வேண்டும்
கருமணியும் சினைமுகிலும் அனையானே!
எனைஆளும் கடைக்கண் ணானே
பருவமடந் தையர்மயில்போல் நடித்ததிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 6

மாகர்தம்மீ தன்றுவைத்த அருள்நோக்கம்
இந்நாளின் மனிதர் தம்மேல்
சோகம்அறச் சிறிதுவைக்க வேண்டும்என்ப
தறியாயோ? சொற்கே ளாதோ?
சீகரவா ரியில்விரித்த பாம்பணையில்
துயில்கூரும் செங்கண் மாலே
பாகவதர் பெருங்கூட்டம் நிலவுதிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 7

நீதம்முழு துணர்ந்தொருபேர் உரைத்தழைத்த
களிற்றெதிர்போய் நின்றாய் என்சொல்
ஏதமுற்ற தானாலும் இகழாமல்
அணிந்தருள்பே றீய வேண்டும்
சீதளசந் திரனோடு கதிர்போலச்
சங்காழி திகழும் கையாய்
பாதகர்கண் காணரிய தானதிரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 8

தூணிடைநின் றிடியேறு பலகோடி
எனநகைத்துத் தோன்றிப் பொல்லான்
காணியுமுள் ளுருகுகாதல் கண்டுகுடர்
பறித்தணிதல் கதையாப் போமோ?
வாணிகொழு நனைப்பயந்த மலருந்தி
உடையானே வாளும் தண்டும்
பாணியிற்கொண் டவிர்வோனே பழுதறும்சீர்திரு
வைகுந்தைப் பதியுள் ளானே! 9

ஊழிவரை அழியாத புகழ்பொருந்தும்
குருகூர னுடன்பல் லோரும்
வாழியெனத் துதித்தநின்பொற் கழல்சூடி
மகிழும்நலம் வருநாள் உண்டோ?
ஆழியும்சங் கமும்அபய வரதமும்கொண்
டென்கனவில் அன்று தோன்றும்
பாழிநெடும் புயமொருநான் குடையானே!
வைகுந்தைப் பதியுள் ளானே! 10

பகரரிய வளமார்ந்த பொழில்சூழும்
திருவைகுந்தைப் பதியுள் ளானை
நிகரில்பெரும் புகழ்உடைய வேணுவனத்
தொருபுலவன் நிகழ்த்தும் பாடல்
அகமகிழ்ச்சி யொடுகருதித் துதிப்போருக்
கெந்நாளும் அளிக்கும் பேறு
மிகவுளதால் அநுபவித்தோர் மற்றையருக்
கொருவாறு விளம்ப லாமே! 11

## ஏழாவது பதிகம்
### வாணுமாமலை
### எழுசீர் சந்த விருத்தம்

நானி லத்தினர் ஏச லால்உனை
நாடி டாதுழல் நாயினேன்
ஆனி இன்றிய தொண்டு செய்துன
தன்ப ரோடுற வாவனோ?
தேனி சைத்துள வார னே!பல
தெய்வ மாவிளை யாடுவாய்
வானி டைப்புகு கோபு ரந்திகழ்
வாணு மாமலை மாயனே! 1

நெஞ்சு ளேஉன தெட்டெ முத்துநி
னைந்தி டாதுழல் நீசருக்கு
அஞ்சு புன்மைத விர்ந்து வென்றுயர்
ஆண்மை யாளனும் ஆவனோ?
நஞ்சுதின்றவ னும்ப ராவிய
நாத னேஎழில் மாதவா!
மஞ்சு லாவிய சோலை சூழ்தரு
வாணு மாமலை மாயனே! 2

நாவில் உன்துதி இன்றி வாழுநர்
　　ஆக இசைந்தமை கூறிடும்
பாவி என்றிக ழாமல் நின்புகழ்
　　பாடு மாறுப ணிப்பையோ?
காவி யுங்கய லுந்து லங்கிய
　　கண்ணி யர்க்கொரு கள்வனே
வாவி சுற்றிய சீர்கு லாவிய
　　வாணு மாமலை மாயனே! 3

எவ்வு யிர்க்கும்இ ரங்கு நின்னருள்
　　இன்றி வாழ்பவர் இல்லையால்
கவ்வு நாயுண வுண்ப வர்க்குங்க
　　ளிப்ப ளிப்பது நீதமோ?
ஒவ்வு மற்றொரு தெய்வ மின்றிஉ
　　யர்ந்து நிற்குமொ ருத்தனே
வவ்வு வார்துய ரங்க ளைந்திடும்
　　வாணு மாமலை மாயனே! 4

குதிரை மாமுக மோடு வந்தொரு
　　கொற்ற வற்குன தன்பர்தாள்
பதிவு றுங்கழ லைப்பு கழ்ந்துயர்
　　பண்ப ளித்திட வில்லையோ?
விதிஇ ருந்தொளிர் உந்தி யாய்கரு
　　மேகம் நாணிய மேனியாய்
மதிஉ டுத்தந கர்க்கு ளேவளர்
　　வாணு மாமலை மாயனே! 5

செந்த மிழ்க்கவி கொண்டு னைத்துதி
செய்தி டாதவர் போலநான்
இந்த நாளில்வ ருந்தி டுந்துயர்
என்று தீரும்இ யம்புவாய்
கந்த னுக்குயர் மாம னாகிய
கண்ண னேமணி வண்ணனே!
மந்த ரக்கிரி நாண நீடிய
வாணு மாமலை மாயனே! 6

ஈசன் முப்புரம் அன்றெ ரித்ததும்
இந்தி ரன்றன்வ னத்திலோர்
நேசன் அங்கியுறப்பு ரிந்ததும்
நின்ன ருட்செயல் அல்லவோ?
நாசம் அற்றொளிர் கேச வாதிரு
நார ணா!முதற் காரணா!
வாச மார்துள வார னே!எழில்
வாணு மாமலை மாயனே! 7

அந்த நாளினில் மூல மேஎனும்
ஆனை முன்பொளிர் ஐயனே
எந்த மக்கொரு தஞ்ச மென்பவர்
யாவும் நீஎனில் எள்வரோ
கந்த ரத்திரு மேனி கொண்டொளிர்
கார ணாகுழைக் காதனே!
மந்த மாருதம் வந்து லாவிய
வாணு மாமலை மாயனே! 8

தூணில் நின்றுகு தித்த தால்ஒரு
சோதி ஆகிய நீஅலால்
வேணி ஈசன்மு தற்பல் வானவர்
வேறு ளார்எனல் மெய்கொலோ?
பாணி யில்சுடர் ஆழி கொண்டொரு
பார வெள்வளை ஊதுவாய்
வாணி யும்புகழ் பொற்பு மேவிய
வாணு மாமலை மாயனே! 9

குருகை யூர்முனி அன்ன சிற்சிலர்
கொண்ட மெய்ப்புகழ் கொள்ளுவோர்
ஒருவ னாமுனை அன்றி வானவர்
உண்டும் என்கினும் ஒப்பிடேன்-
கருட வாகன மீது லாவிய
கார்எ னத்திகழ் நாரணா!
மரும லர்க்கொடி கேள்வ னேதிரு
வாணு மாமலை மாயனே! 10

செந்து வர்க்கனி வாய்கொள் மோகினி
சென்ற வேணுவ னத்திலே
வந்துறு நம்தமிழ் நாவ லன்றிகழ்
வாணு மாமலை மாயன்மேல்
பைந்து ணர்த்துள விற்றொ டுத்தணி
பாடல் பத்தும்வி ரும்புவார்
நந்து றாவிர சைக்கும் அப்புறம்
நண்ணி வாழ்வர்எந் நாளுமே! 11

## எட்டாம் பதிகம்
## திருவனந்தபுரம்
### காப்பியக் கலித்துறை

பைம்பொன் வேண்டிநின் றுருகிடும் படிறனேன் றனக்குன்
செம்பொன் மாமலர்த் திருவடி எய்துமோ? செப்பாய்-
கம்பொன் றாழிஒன் றேந்திய கையுடைக் களிறே
அம்பொன் மாமதிள் அனந்தையில் குடிகொளும் அரசே! 1

பூனை போல்திரிந் தடன்மிகு புலியெனப் பாயும்
ஏனை யோர்களை இடுக்கணுட் படுத்துநாள் என்றோ?
தேனை நேரமொழித் திருமகள் மருவிய செல்வா
ஆனை மிக்குறும் அனந்தையில் குடிகொளும் அரசே! 2

தளவி லங்கிய தவளவாள் நகைச்சியர் தம்மால்
களவி ருந்தநெஞ் சினரிகல் கடக்குமாண் பருள்வாய்-
துளவி சைந்தொளிர் துணைப்பதம் உடையசிற் சொரூபா!
அளவில் சீர்திகழ் அனந்தையில் குடிகொளும் அரசே! 3

துங்க மேலிடத் துடிதுடித் தறுதினஞ் சுழலும்
எங்க ளுக்கருள் புரிவதற் கிரங்குநாள் என்றோ?
பங்க யப்பரு மலர்கள்போல் அவையவம் பலசேர்
அங்க மோடெழில் அனந்தையில் குடிகொளும் அரசே! 4

பைம்புல் ஆதிய நுகர்வன தம்மையும் பருகும்
வம்பு தோய்தரும் மடையருக் காண்மைஏன் வகுத்தாய்?
தெம்பு கொண்டெதிர்த் தமர்செய்வோர் முடிபடத் தெறிக்கும்
அம்பு ளார்வளர் அனந்தையில் குடிகொளும் அரசே! 5

தொண்டர் சேரகன் என்றொரு மானிடன் துலங்கி
வண்டர் யாவரும் தொலைவுறப் புரியும்நாள் வருமோ?
தண்டம் வாள்வளை சக்கரம் வில்லொடு தரித்தாய்!
அண்டர் போற்றிடும் அனந்தையில் குடிகொளும் அரசே! 6

கொடிய தானவர் விளைதொறும் திருவுருக் கொண்டு
தடிய வல்லநீ தாமதப் படுவதேன்? சாற்றாய்-
நெடிய மேனியில் பன்னிரு நாமமும் நிலவும்
அடியர் வாழ்திரு அனந்தையில் குடிகொளும் அரசே! 7

களிறு கோஎனக் கதறிடச் சுரந்தநின் கருணை
எளிய னேன்அள விரங்கிடா திருப்பதேன் இயம்பாய்-
வளிஉ லாவர மதுவுடன் அலர்பல மலரால்
அளிய றாப்பொழில் அனந்தையில் குடிகொளும் அரசே! 8

வன்பர் கோஎனும் இரணியன் மனக்குடர் பறித்த
நின்ப ரும்புயத் தணிந்தவீ றடங்குமோ? நிகழ்த்தாய்
இன்ப வாரியைப் பொதுவர்மங் கையர்க்கு முன்ஈந்தாய்
அன்பர் வாழ்வுறும் அனந்தையில் குடிகொளும் அரசே! 9

பொருநை தோய்தரு குருகையில் புலவன்நேர் புனிதர்க்கு
ஒருவன் ஆகிநின் றருளிய வாறெனக் குதவாய்-
தெருளும் மாருதி தலைஅணி பங்கயத் திருத்தாள்
அருமை மேலிடும் அனந்தையில் குடிகொளும் அரசே! 10

ஆனி மேவரும் அனந்தையில் குடிகொளும் அரசை
மேனி லந்தொடும் வேய்வனத் துதித்தவன் விளம்பும்
பானி கர்த்தவண் டமிழ்க்கவி ஒருபதும் படிப்போர்
வேனில் வேள்விதி யாம்என வாழ்வது மெய்யே. 11

## ஒன்பதாம் பதிகம்
## நூற்றெட்டுத் திருப்பதி
## எண்சீர் ஆசிரிய விருத்தம்

எப்பிறப்பில் எவ்வகைத்தீ தியற்றி னாலும்
எனைச்சேரா தின்பமெல்லாம் இசையு மாறு
துப்பிணைந்த சிறையுடைப்புள் அரசின் தோள்மேல்
துலங்கிஎனை ஆண்டொருசொல் சொல்வாய் கொல்லோ?
விப்பிரர்க்கும் குலதெய்வம் ஆகி அன்னோர்
விளம்புகின்ற நூல்களுக்கும் மேலா நின்றாய்!
ஒப்பில்புகழ்க் குறுங்குடியே முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 1

சீதமதி முகமடவார் வாஞ்சை யாலும்
திருட்டுநூல் புறமாதத்தோர் செய்கை யாலும்
வாதமிடும் புலைத்தொழிலோர் கொடுமை யாலும்
வருந்தும்என்மேல் சிறிதிரக்கம் வைக்கொண் எணாதோ?
ஆதவன்தென் னிலங்கையிற்போய் வரப்போர் செய்தாய்
அனுமானுக் குடனுணும்பே றளித்தன் றாண்டாய்
ஓதருஞ்சீர்ப் பேரையூர் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 2

“செம்பதும மலர்ப்பேதை அகலா தென்றும்
திகழ்மார்பா” எனத்தமிழால் தினமும் கூவிக்
கம்பலைஉற் றழுது,தொழு துய்ந்த மேதலோர்
கழல்உகுக்கும்துகள்புனைந்தும்கவன்றேன் கண்டாய்
கும்பமதக் களிறுகொன்றாய்! அரவம் தோன்னறும்
உம்பர்தொழும் இடபகிரி முதலாச் சொல்லும்
ஒருநூந்றெண் பதியிடத்தம் ஒளிரும்மாலே! 3

செத்தபிணம் புசிப்பதன்றிக் கொன்றும் தின்று
திறல்அரக்கர் எனவாழும் தீயோர் ஊரில்
முத்தலைவேல் சமன்எனப்போய்ப் பொருது வெல்லும்
முனைவீரர் இனிஉலகில் முளைக்கொண் ணாதோ?
பைத்தலைபாம் பணைமீதில் அமரர் போற்றிப்
பள்ளிகொள்ளும் பெருமானே! பழுதிலாத
உத்தமர்சேர் இந்தளூர் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 4

நயம்கமழும் தமிழ்ச்சுவைசற் றறியா மூடர்
நடைதோறும் சென்றுசென்று நலியா வண்ணம்
பயம்சினம்ஆ தியதவிர்க்கும் உபய பாதப்
பணிஅளித்தா னந்தவெள்ளம் படியச் செய்வாய்
அயன்றனக்கும் அரன்றனக்கும் மற்றை விண்ணோர்
அனைவருக்கும் துணைஆகும் ஆழி யானே!
உயர்ந்தபொழில் கண்ணபுரம் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 5

துன்னரிய பெரும்பேறு விரும்பும் நாயேன்
துளவாதி எடுத்தணிந்துன் துணைத்தாள் போற்றேன்
கின்னரிஏந் தியகரத்துன் னடியார் இன்சொல்
கேட்டுருகேன் எவ்வாறு கிடைக்குங் கொல்லோ?
பன்னரிய பழமறையும் பெரிது போற்றும்
பகவனே உலகளந்த பாதத் தானே
உன்னரிய நீர்மலையே முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 6

பாகைநிகர் சொல்லியருக் குருகா துண்மைப்
பாகவதர் விளையாட்டைப் பழித்தி டாது
வாகைபுனை தோள்வீரர்க் கினிய நின்தாள்
மறவாது வாழும்நலம் வரும்நாள் என்றோ?
கூகைஇனம் கதறிடத்தீ இலங்கை யூரில்
கொளுத்தியமா ருதிபரவும் கொற்றத் தெந்தாய்
ஓலைதரும் திருமுட்டம் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 7

வாவியிடை மூலமெனக் கதறும் ஆனை
மகிழ்கூர ஆழியொடு வந்து தோன்றிப்
பாவிஇடங் கரைத்தொலைத்தாய் எனப்பல் நூலும்
பகர்வதுகேட் டுனைஅடைந்தும் பயந்தேன் கண்டாய்
தேவினத்துக் கரசாய முகுந்தா நல்லோர்
திடுக்கம்அற விளையாடும் திருத்தோ ளானே
ஓவில்புகழ்த் தஞ்சைநகர் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பயிடத்தும் ஒளிரும் மாலே! 8

ஈனர்களுக் கானமொழி விளக்க நாடும்
இரணியன்வாள் எடுக்கவும்தூ ணிடைநின் றந்நாள்
கானவய மாமுகத்தோ டுதித்துக் கொன்று
காசினியோர்க் குவகைநல்கல் கதையாய்ப் போமோ?
பானல்அம்கண் பேதைநல்லார் இருவர் சேரும்
பகவனே! அரவணையில் பள்ளி கொண்டாய்!
ஊனமில்சீர்க் குடந்தைநகர் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 9

தாங்குபுகழ்த் துணைத்தோளில் வகுளம் பூண்ட
தமிழ்ப்புலவன் முதற்சிலர்போல் தமிய னேன்உன்
பாங்குணரப் பெற்றுவிளை யாடிக் கோடி
பாகவத ருடன்வாழப் பணிப்பாய் கொல்லோ?
தீங்குதவிர் மாவலிபால் சிறுவன் ஆகித்
திருட்டுவெள்ளி குருடாகச் செய்த பின்னர்
ஓங்குதிருக் கோவிலூர் முதலாச் சொல்லும்
ஒருநூற்றெண் பதியிடத்தும் ஒளிரும் மாலே! 10

உரியநூற் றெண்பதியும் அன்றி இன்னும்
ஒருகோடி திருப்பதியில் ஒளிரும் மாலாம்
கரியமா ணிக்கவண்ணப் பெருமாள் வாழும்
கவின்உடைய வேய்வனத்துக் கவிஞன் அன்பால்
பெரியராம் பாகவதர் மகிழக் கூறப்
பிறங்குதமிழ்க் கவிதைபத்தும் பேச வல்லார்
விரிஅரா வணைத்துயின்ற கோலம் கண்டு
விரசைகடந் தப்புறத்தும் மேவு வாரே. 11

## பத்தாம் பதிகம்
### அடியவர் உள்ளம்
### அறுசீர் வண்ண விருத்தம்

**தனதன தனதன தனதானா**
**தனதன தனதன தனதானா**

கயல்நிகர் விழியினர் மயலாலே
கழிமுடை நுகர்பவர் பகையாலே
பயம்உறு தமியன்உன் அருளாலே
பலநல மொடுகதி பெறுவேனோ?
வயம்மிகும் அநுமனை அனையார்பால்
மிகிழ்வுறு திருவுளம் உடையானே
அயன்அரன் முதலினர் துணையாவாய்
அடியருள் மருவிய திருமாலே! 1

துணிவுறு தவமுயல் பவர்போலே
துகள்அறு மொழிபல பகர்வேன்நேர்
பணிலமும் வளையொடு கொடுநீயோர்
பறவையின் முதுகினில் வருவாயோ?
மணிநிற முகில்நிகர் நெடியோனே!
வரதமும் அபயமும் உடையோனே!
அணிபணி யினும்மிகு துளவோனே!
அடியருள் மருவிய திருமாலே! 2

கரவறு மனதுறு பெரியோர்நூல்
கழறிய விதிவழி நடவாதே
பரவசர் எனமொழி பகர்தீயோர்
பகைமுதிர் வுறமனம் மெலிவேனோ?
குரவர்கள் பலர்தொழும் ஒருதேவே!
குதிரையின் முகமொடும் வருவோனே!
அரவணை மிசைதுயில் நெடியோனே!
அடியருள் மருவிய திருமாலே! 3

சவுரவர் முதலினர் தொழநீயே
தழைவுறும் நிசமுணர் வதனாலே
மவுனம்என் உயர்நிலை அடையாதே
மடையர்கள் எனவமர் இடலாமோ?
கவுரவ குலபதி விடுதூதா
கனமரு தொடுசக டடுவோனே!
அவுணர்கள் கெடஅமர் பொரும்வீரா!
அடியருண் மருவிய திருமாலே! 4

விரிகடல் உலகினில் மனுவேயோல்
மிளிரவு மெலிவறு பெருமான்நீ
வரிவிழி யுமையவ ளுடனோர்கால்
வரல்நிசம் எனில்உயிர் வதுபோமோ?
பரிவுறு தயரதன் மகவானாய்!
பரிமுக முடனொரு சிசுவானாய்!
அரிகரி எனும்அவர் துணைவோனே!
அடியருள் மருவிய திருமாலே! 5

மனிதரில் ஒருபதர் எனும்நாயேன்
மணிஎன அவிர்தர விழைவானேன்;
இனியவர் பலருடன் அருளாலே
எழில்உயர் கருடனில் வருவாயே
பனிமிகு வடமது ரையில்மேனாள்
பகவதி பிறகினும் வருவோனே!
அனில்மொ டமர்செயும் அரவாளா!
அடியருள் மருவிய திருமாலே! 6

கொலையொடு புலைசெய வெகுளாதார்
குடிகெட அமர்செயும் ஒருமேலோன்
இலைதிகழ் அயில்கொடுன் மருகோனே
எனஉல கினில்வர அருள்வாயே-
மலையுறு கரதலம் உடையானே!
மலரயன் முதலினர் பணிதாளா!
அலைகடல் சுவறிட வரும்வீரா!
அடியருள் மருவிய திருமாலே! 7

களிறுமுன் அலமர எதிரேஓர்
கருமலை எனநில வியநீயே
எளியன வலியன எனவாழ்தே
இனம்முழு மையுமெனல் அறியேனோ?
வெளிமுக டளவிய நெடியோனே!
மிடியற அருள்செயும் விழியானே!
அளிமது நுகர்துள வணிமார்பா
அடியருள் மருவிய திருமாலே! 8

இகலிமுன் மகவுறு துயர்நாடா
இரணிய னதுகுடர் அணிவோனே!
பகன்முதல் எவர்களும் என ஓரார்
பதர்என அநுதினம் மொழியேனோ?
குகன்எனும் வனசரன் உறவானாய்!
குருகுலம் உறுபிழை களைவோனே!
அகல்நில மகள்மலர் மகள் கேள்வா!
அடியருள் மருவிய திருமாலே! 9

பொருநையின் அருகொளிர் குருகூர்வாழ்
புலவனொ டுரைசெய வரும்ஆழ்வார்
ஒருபதொ டிருவரும் மொருமேலோ-
டுறுவதில் உயர்நலம் உதவாயோ?
பருமலர் உடையவள் மணவாளா!
பலபல வடிவுடன் வருவோனே!
அருள்வலி முழுதுணர் பெரியோராம்
அடியருள் மருவிய திருமாலே! 10

வளம்அநு தினம்மலி வுறும்வேயூர்
வயினுறும் அவர்தவம் நிகர்ஓர்சேய்
அளவினில் அமைவறு தொகையோராம்
அடியருள் மருவிய திருமான்மீது
உளமகிழ் வொடுவரை தருபாவாம்
ஒருபதும் நலம்என வுணர்வார்தாம்
இளநகை மடவியர் மகவாகா
இயல்பருள் பரகதி அடைவாரே! 11

## நூற்பயன்
### நேரிசைவெண்பா

மத்து படாத்தயிரை வாரிஉண்ட மாயவன்தன்
பத்துப் பதிகம் படிப்போர்க்குச்- செத்துப்
பிறவாத வைகுந்தம் பெற்றிருக்கும் பேறும்
இறவாத கீர்த்தியும்உண் டே.

# பின்னிணைப்பு

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி

### ப-பதிகஎண் பா-பாடல்எண்


| | ப-பா |
|---|---|
| அங்கம்ஒரு நான்குடைய | 6-4 |
| அஞ்சனும் ஈசனும் | 2-5 |
| அஞ்சுபூதமும் | 4-3 |
| அடர்கரிய வரைகள்நிகர் | 6-5 |
| அந்த நாளினில் | 7-8 |
| ஆய்கைநேர் திருவுரு | 3-8 |
| ஆனி மேவரும் | 8-11 |
| ஆனையூன் அருந்த | 4-9 |
| ஆனைவனத்திடை | 2-8 |
| இகலிமுன் மகவுறு | 10-9 |
| இயலுடைப் புலவனுக்கு | 3-3 |
| இளம்குதலைச் சிறுபாலர் | 5-1 |
| இளையமடந்தையர் | 2-1 |
| ஈசன் முப்புரம் | 7-7 |
| ஈனர்களுக் கானமொழி | 9-9 |
| உன்பேர் உரைப்போ | 5-5 |
| உன்னுருத் தோன்றிய | 3-2 |
| உன்னைவிட் டொருதே | 4-7 |
| உரிய நூற்றெண்பதியும் | 9-11 |

| | |
|---|---|
| உலகம்அளிக்கும் | 2-4 |
| உறங்கிடாப் புளியில் | 4-10 |
| ஊர்அளந்த கொடுமைஉளார் | 6-2 |
| ஊழிவரை அழியாத | 6-2 |
| எத்தனையோ கோடிஉரு | 5-2 |
| எப்பிறப்பில் எவ்வகைத்தீ | 9-1 |
| எயில் உடுக்கும் தென்குருகை | 5-10 |
| எவ்வுயிர்க்கும் | 7-4 |
| ஏழையர் கருதொணா | 3-5 |
| ஒருமகன் என்றும் | 2-9 |
| கந்தரமேநிக | 2-2 |
| கயல்நிகர் விழியினர் | 10-1 |
| கரவறு மனதுறு | 10-3 |
| கரவிலா மனத்தால் | 1-2 |
| கள்ளமா மொழிபககர் | 3-9 |
| களிறுகோஎனக் | 8-8 |
| களிறுமுன் அலமர | 10-8 |
| கார்உலாம் பொழில்சேர் | 4-1 |
| காளநெடுங்கட | 2-6 |
| கிண்ணமுலைலப் பேதைநல்லார் | 6-3 |
| குதிரை மாமுக | 7-5 |
| குருகையூர்முனி | 7-10 |
| கொடிய தானவர் | 8-7 |

| | |
|---|---|
| கொண்டல்மேல் வளர்புளி | 3-10 |
| கொலையொடு புலைசெய | 10-7 |
| கொள்ளரிதாம் எட்டெழுத்தில் | 5-3 |
| கோமளக் குறத்தி | 4-6 |
| சதிமிகு சமணரில் | 3-4 |
| சவுரவர் முதலினர் | 10-4 |
| சீதமதி முகமடவார் | 9-2 |
| செத்தபிணம் புசிப்பதன்றி | 9-4 |
| செந்தமிழ்க்கவி | 7-6 |
| செந்துவர்க்கனி | 7-11 |
| செப்பரும் பெருஞ்சீர் | 4-11 |
| செம்பதும மலர்ப்பேதை | 9-3 |
| சேவிடத்திவர்திரு | 3-6 |
| தருமமுதல் ஆகியநால் | 6-6 |
| தவம்முயன்றுழல்வார் | 4-2 |
| தளவிலங்கிய | 8-3 |
| தன்நிகரும்குரு | 2-10 |
| தாங்குபுகழ்த் துணைத்தோளில் | 9-10 |
| திருமகள் குலவும் | 1-1 |
| துங்க மேதலிடத் | 8-4 |
| துணிவுறு தவமுயல் | 10-2 |
| துளவுடன் பலமலர் | 3-1 |
| துன்னரிய பெரும்பேறு | 9-6 |

| | |
|---|---|
| தூணில் நின்றுகு | 7-6 |
| தூணிடைநின்றிடியேறு | 6-9 |
| தூணுளே நின்று | 1-9 |
| தொண்டர் சேகரன் | 8-6 |
| நத்து பதுமமென்கை | (காப்பு) |
| நயம்கமழும் தமிழ்ச்சுவை | 9-5 |
| நாடவர்கள் பற்பலரும் | 5-7 |
| நாணிஒரு தொண்டன் | 5-9 |
| நாவில் உன்துதி | 7-3 |
| நானிலத்தினர் | 7-1 |
| நீதம் கருதார் | 5-6 |
| நீதம்முழுதுணர்ந்தொருபேர் | 6-8 |
| நீயெனக் கந்நாள் | 4-5 |
| நெஞ்சுளேஉனது | 7-2 |
| பகரரிய வளமார்ந்த | 6-7 |
| பண்ணொடு நின்தமிழ் | 2-3 |
| பாகைநிகர் சொல்லியருக் | 9-7 |
| பாவலர்க் கெளியாய் | 4-4 |
| புலிமிகு பாரவ | 2-7 |
| புளிநிழல் அமர்ந்தோன் | 1-10 |
| பூனைபோல் திரிந்து | 8-2 |
| பைம்புல்ஆதிய | 8-5 |
| பைம்பொன் வேண்டி | 8-1 |
| பொய்வழக் குரைக்கும் | 4-8 |

| | |
|---|---|
| பொருநை தோய்தரு | 8-110 |
| பொருநையின் அருகொளிர் | 10-10 |
| மத்து படாத்தயிரை | (நூற்பயன்) |
| மனிதரில் ஒருபதர் | 10-6 |
| மாகர்தம்மீ தன்றுவைத்த | 6-7 |
| மூலமெனக் கூவியதால் | 5-8 |
| மைத்தடங்கண் செந்திருவும் | 6-1 |
| வஞ்சக வெள்ளி | 1-5 |
| வளம்அநுதினம்மலி | 10-11 |
| வன்பர் கோயெனும் | 8-9 |
| வாடிய மனத்தி | 11-7 |
| வாவியிடை மூலமெனக் | 9-8 |
| வாவியிற் கதறும் | 1-8 |
| வானிடை வளர்ந்த | 1-11 |
| வியனார்தண் தமிழ் | 5-11 |
| விரிகடல் உலகினில் | 10-5 |
| வில்திகழும் வான்நுதலாள் | 5-4 |
| வீழியங் கனிவாய் | 1-3 |
| வெற்றியொடன்றொரு | 2-11 |
| வேடரும் இகழ்தசை | 3-7 |
| வேணுமால் வனத்திடை | 3-11 |
| வேலியே பயிரைத் | 1-6 |
| வைவவர் தமக்கும் | 1-4 |

# அருஞ்சொற்பொருள்

## ப-பதிகஎண் பா-பாடல்எண்

| | ப-பா |
|---|---|
| அஞ்சனக்களிறு-மைபோன்ற கருமையான களிறு | 1-5 |
| அரவம்-பாம்பு | 9-3 |
| அவுணர்-அரக்கர் | 3-9 |
| ஆடகவரை-பொன்மலை | 3-7 |
| ஆழி-சக்கரம் | 2-1 |
| ஆனை-கசேந்திரன் | 2-8 |
| இடபகிரி-திருமாலிருஞ்சோலை, அழகர்கோயில் | 9-3 |
| உந்தி-கொப்பூழ் | 3-4 |
| கஞ்சன்-கம்சன் | 1-5 |
| கதறிபம்- யானை | 3-8 |
| கந்தரம்-மேகம் | 2-2 |
| கலை-புடவை | 2-6 |
| கனகன்- இரணியன் | 3-9 |
| காள-கரிய | 2-6 |
| குதிரைமுகன்-ஹயக்ரீவன் | 10-3 |
| குருகூரன்-நம்மாழ்வார் | 2-10 |
| கொடிஉடையான்-துரியோதனன் | 9-3 |
| சகடு-சகடாசுரன் | 10-4 |
| சமன்-இயமன் | 4-11 |
| சற்சனர்-ஆழ்வார் | 2-10 |
| சிதடன்-அறிவில்லான் | 1-4 |
| சிறுவன்-வாமனாவதாரம் | 9-10 |
| சூழியம்-குழந்தைகள் முடிக்கும் உச்சுக் கொண்டை | 1-3 |

| | |
|---|---|
| செஞ்சரோருகம்-செந்தாமரை | 1-5 |
| தாணு-சிவபெருமான் | 3-11 |
| தில்-வீரம் | 6-5 |
| தேவினம்-தேவர்கூட்டம் | 10-8 |
| பண்டசோதை-யசோதை | 3-10 |
| பதி- ஆயர்பாடி | 4-8 |
| பாலன்-கண்ணன் | 3-10 |
| புங்கவர்-வானோர் | 1-10 |
| பொதுவர்-இடையர் | 4-8 |
| பொற்கிரி-பொன்மலை, கயிலை | 2-11 |
| பேரையூர்-தென்தில்பேரை | 9-2 |
| மருது-மருதமரவடிவெடுத்த அசுரன் | 10-4 |
| மின்னாள்-நிலமகள் | 2-6 |
| வளி-காற்று | 8-8 |
| வளை-சங்கு | 2-1 |
| வனம்-நீர்நிலை, மடு | 2-8 |
| வரிவில் - நாணால்கட்டப்பட்டவில் | 1-6 |
| வாங்கிய-வளைத்த | 1-6 |
| விரசை-வைகுண்டத்திற்குப் போகும் வழியில் கடக்க வேண்டிய ஓர் ஆறு, விரஜாநதி | 1-11 |
| வெப்பம்-உலகத்துத் துன்பமாகிய கடு | 4-11 |
| வெள்ளி-சந்திரன் | 9-10 |
| வேயூர்-திருநெல்வேலி | 10-11 |
| வைவவர்-சிசுபாலனைக் கூறியது | 1-4 |

# நூற்றெட்டுத் திருப்பதிகள்

திரு அட்டபுயகரம்
திரு அத்தியூர்
திருஅதநந்தபுரம்
திரு அயோத்தி
திரு அரங்கம்
திரு அரிமேய விண்ணகரம்
திருவல்லிக்கேணி
திருஅழுந்தூர்
திருஅன்பில்
திருஆதனூர்
திருஆய்ப்பாடி
திருஆலி
திருவடந்தை
திருஇந்தளூர்
திருஊரகம்
திருஎவ்வுள்(திருவள்ளூர்)
திருக்கடல் மல்லை(மகாபலிபுரம்)
திருக்கடிகை(சோளங்கிபுரம்)
திருக்கடித்தானம்
திருக்கண்டங்கடி
திருக்கண்டியூர்
திருக்கண்ணங்குடி
திருக்கண்ணபுரம்
திருக்கண்ணமங்கை
திருக்கரம்பனூர்(உத்தமர்கோயில்)
திருக்கவித்தலம்
திருக்கள்வனூர்

திருக்காட்கரை
திருக்காரகம்
திருக்கார்வானம்
திருக்காவளம்பாடி
திருக்காழிச்சீராமவிண்ணகரம்
திருக்குடந்தை(கும்பகோணம்)
திருக்குருகூர்(ஆழ்வார் திருநகரி)
திருக்குளந்தை(பெருங்குளம்)
திருக்கருங்குடி
திருக்கூடலூர்
திருக்கூடல்
திருக்கோட்டியூர்
திருக்கோவலூர்
திருக்கோழி(உறையூர்)
திருக்கோளூர்
திருச்சாளக்கிராமம்
திருச்சிங்கவேள்குன்றம்
திருச்சித்ர கூடம்(தில்லை)
திருச்சிரீவரமங்கை(நாங்குனேரி வானமாமலை)
திருச்சிறுபுலியூர்
திருச்செங்குன்றூர்(செங்கனூர் சிற்றாறு)
திருச்செம்பொன்செய்கோயில்
திருச்சேறை
திருத் தஞ்சை மாமணிக்கோயில்
திருத்தண்கா
திருத்தண்கால்(திருத்தண்காலூர்)
திருத்தலைச்சங்க நாண்மதியம்
திருத்துவராபதி
திருத்தெற்றியம்பலம்

திருத்தேவனார்தொகை
திருத்தொலைவில்ல மங்கலம்
திருநந்திபுர விண்ணகரம்
திருநறையூர்
திருநாகை (நாகப்பட்டிணம்)
திருநாவாய்
திருநிலாத் திங்கள் துண்டம்
திரு நின்றவூர்(தின்னனூர்)
திருநீரகம்
திருநீர்மலை
திருநைமிசாரண்யம்
திருப்பரமபதம்
திருப்பரமேச்சுர விண்நகரம்
திருப்பவள வண்ணம்
திருப்பாடகம்
திருப்பார்த்தன்பள்ளி
திருப்பாற்கடல்
திருப்பிரதி
திருப்புட்குழி
திருப்புலியூர்(குட்டநாடு)
திருப்புல்லாணி(தர்ப்பசயனம்)
திருப்புளிங்குடி
திருப்பேரை
திருப்பேர்நகர்(கோவிலடி)
திரு மணிக்கூடம்
திருமணிமாடக்கோயில்
திருமாலிருஞ்சோலை(அழகர்கோயில்)
திருமூழிக்களம்
திருமெய்யம்(திருமயம்)

திருமோகூர்
திருவடமதுரை(மட்ரா)
திருவண்பரிசாரம்
திருவண்புருடோத்தமம்
திருவண்வண்டூர்
திருவதரிவாச்சிரமம்
திருவயிந்திரபுரம்
திருவரகுண மங்கை
திருவல்லவாழ் (திருவல்லா)
திருவாட்டாறு
திருஆறன்விளை
திருவிண்நகர்
திருவிற்றுவக்கோடு
திருவில்லிபுத்தூர்
திருவெஃகா
திருவெள்ளக்குளம்
திருவெள்ளறை
திருவெள்ளியங்குடி
திருவேங்கடம்
திருவேளுக்கை
திருவைகுந்தம்
திருவைகுந்த விண்ணகரம்

# துணைநூற்பட்டியல்


திருவாமாத்தூர் பதிகச்சதகம் - வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் உரையும் பதிப்பும் புலவர் பா.வெ. நாகராஜன் சிரவைக் கௌமாரசபை வெளியீடு, முதல்பதிப்பு-1998.

நாலாயிர திவ்யவிரபந்தம் - திருவேங்கடத்தான் திருமன்றம் சென்னை-14 முதல்பதிப்பு-1973.

தமிழ் மொழி அகராதி தமிழ் - தமிழ் அகராதி - நா. கதிரைவேற்பிள்ளை ஆறாம் பதிப்பு-1998.